**இணைப்பு 01**

**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பெறுபேற்றுக் கிளை**

# 2023(2024) - க.பொ.த. (உ.தர)ப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சை பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) முறைமையில் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

01. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும் போது உண்மையான தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும். உண்மைக்கு மாறான தகவல்கள் உள்ளடக்கப்படின் நிரந்தரமாக பரீட்சைப் பணிகளிலிருந்து நீக்கப்படுவர்.

**02.** செய்முறைப் பரீட்சகர் குழுவிற்கு விண்ணப்பிக்கும் அலுவலரின் குடும்ப உறுப்பினரொருவர் அல்லது வீட்டில் வதிபவர் ஒருவர் மேற்படி பரீட்சையின் செய்முறைப் பரீட்சைப் பாடங்களுக்கு தோற்றுவாராயின் அவ் அலுவலர் இப்பரீட்சைக் குழுவிற்காக **விண்ணப்பிக்க முடியாது.**

03. எவரேனும் ஒரு அலுவலர் இச்செய்முறைப் பாடங்களுக்கு பிரபல்யமான தனியார் வகுப்புக்கள் நடத்துபவராயின் அவர் பரீட்சைக் குழுவின் எப்பதவிக்கும் **தகுதியற்றவராதலால் விண்ணப்பித்தலாகாது.** அரசு அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலையொன்றில் நிரந்தர பதவியுடைய ஆசிரியர் மட்டுமே செய்முறைப் பரீட்சைக் குழுவிற்கு விண்ணப்பிக்க முடியும்.

04. நிகழ்நிலை முறையில் விண்ணப்பப்படிவத்தை பின்வரும் முறைகளில் செயற்படுத்த முடியும். விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

- ✶ உத்தியோகபூர்வ இணையத்தளத்தளமான (www.doenets.lk) இல் நுழைந்து "எமது சேவைகள்" (our services) இன் கீழுள்ள நிகழ்நிலை முறைமை விண்ணப்பப்படிவம் (பாடசாலைப் பரீட்சைகள்) என்பதை கிளிக் செய்த பின்னர் "G.C.E. (A/L) – Examination 2023(2024) Obtaining Information to Select Examiners for the for practical Tests" என்பதை click செய்வதன் மூலமோ,
- ✶ பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (Mobile Application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்) என்பதை click செய்த பின்னர் "G.C.E. (A/L) – Examination 2023(2024) Obtaining Information to Select Examiners for the for practical Tests" (Online applications - school exams) click செய்வதன் மூலமோ,
- ✶ https://online.exams.gov.lk/eic பிரவேசித்த பின்னர் கிடைக்கப்பெறும் அனுமதி உறையினுள் "Personal Account Login" முறைமைக்குள் பிரவேசிக்கவும்.

05. நட்சத்திர (*) குறியீடு காட்டப்பட்டுள்ள பகுதிகளை கட்டாயமாக பூரணப்படுத்துவதுடன் தமக்குரிய ஏனைய பகுதிகளையும் தமக்கு உரித்தானவற்றை பூரணப்படுத்துதல் வேண்டும்.

06. நிகழ்நிலை முறைமையில் விண்ணப்பப்படிவத்தின் முதல்பக்கத்தைப் பூரணப்படுத்தும் போது தங்களுடைய **செல்லிடத் தொலைபேசி இலக்கத்தையும்** மேலதிகமாக **WhatsApp** இலக்கத்தையும் நிரந்தர தொலைபேசி இலக்கத்தையும் (இருப்பின்) உள்ளடக்கவும்.

அவ்வாறு இல்லையெனில் தங்களுடைய வேறொரு தொலைபேசி இலக்கம் ஒன்றையோ உள்ளடக்கவும்.

07. இணையத்தள பக்கங்களை மாற்றுவதற்கு ‘‘Back‘‘ அல்லது ‘‘Next‘‘ பொத்தானை பயன்படுத்தவும். அதில் இரண்டாவது பக்கத்தில் நீங்கள் விண்ணப்பிக்கும் மாவட்டத்திற்கு மேலதிகமாக நாடளாவிய ரீதியிலுள்ள வேறு எந்த மாவட்டத்திலாயினும் பணியாற்றுவதற்கு **விருப்பமா? இல்லையா? என்பது தொடர்பாக நன்கு விளக்கம்பெற்று** பூரணப்படுத்துக.

08. விண்ணப்பப்படிவத்தில் சகல பகுதிகளையும் பூர்த்தி செய்து ‘‘Submit‘‘ பொத்தானை Click செய்த பின்னர் தங்களுடைய விண்ணப்பப்படிவத்தை PDF வடிவத்தில் தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும். அவ்விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியொன்றை (Printout) தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ‘‘Submit‘‘ செய்வதற்கு முடியாமைக்கு முக்கிய காரணமாக தங்களால் நட்சத்திர (*) குறியீடுள்ள பகுதிகள் சரியாக பூரணப்படுத்தப்பட்டிருக்காமையால் என்பதால் மீண்டும் முன்பக்கங்களை சரிபார்க்கவும்.

09. அச்சுப்பிரதியில் இல **13 பகுதியை (நேர அட்டவணை)** கையெழுத்தில் பூரணப்படுத்தி நிறுவனத் தலைவர்/அதிபர் மூலமாக உறுதிப்படுத்துதல் வேண்டும்

10. தாங்கள் இதற்கு முன்னர் **பிரதம/உதவிப் பரீட்சகராக** பணியாற்றியிருப்பின் அச்சுப்பிரதியின் வலது பக்க மேல் மூலையிலுள்ள கூட்டில் பணியாற்றிய வருடங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்.

**11. சரியாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.**

12. உரிய நிறுவனத் தலைவர்/அதிபர் மூலமாக இல **15 வது பகுதியை** பூரணப்படுத்திய பின்னர் சகல விண்ணப்பப்படிவங்களையும் ஒரே உறையிலிட்டு 2024.02.02 ஆம் திகதிக்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்ல**

13. முகவரி எழுதிய உறையின் இடது பக்க மேல் மூலையில் **‘‘2023(2024) க.பொ.த. (உ.தர)ப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சை’’** என குறிப்பிடவும்.

14. தங்களுக்கு மேலதிகமாக அறிவுறுத்தல்கள் தேவைப்படின் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுடாக **பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளையுடன்** தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 0112784208 / 0112784537